# புதுக்கோட்டையில் அரசுப்பள்ளி திறக்கப்படாததால் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்த மாணவர்கள்!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (18.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தேசிய இளைஞர் அணிச் செயலாளர் திருமதி ஸ்ரீநிதி மோகன் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை, ஜூன் 19-

விராலிமலையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி காலை 9 மணி கடந்தும் திறக்கப்படாததால் மாணவர்கள் வெளியில் காத்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் அரசுப்பள்ளி பூட்டை உடைத்து உள்ளே நுழைந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விராலிமலையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் சுமார் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த பள்ளிக்கு காவலாளி தற்போது நியமிக்கப்படவில்லை. ஏற்கனவே இந்த பள்ளியில் பணியாற்றி வந்த காவலாளி குறைவான சம்பளம் காரணமாக வேலையை விட்டு நின்றுவிட்டதால், தற்போது காவலாளி பணியிடம் காலியாக உள்ளதுடன், தலைமை ஆசிரியரே பள்ளியை பூட்டை திறக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை 8 மணிக்கு வந்த மாணவர்கள் நீண்ட நேரம் பள்ளியின் முன்பு காத்திருந்தனர். காலை 9 மணி கடந்தும் பள்ளி திறக்கப்படாததால், பொறுமையிழந்த மாணவர்கள் அரசுப் பள்ளியின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தனர். பள்ளி மாணவர்கள் 40 நிமிடம் மேலாக வாசலில் காத்திருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. தலைமை ஆசிரியரின் இந்த அலட்சிய போக்கை பெற்றோர்கள் கண்டித்துள்ளனர். மேலும் முறையாக மாவட்ட கல்வி நிர்வாகம் விசாரணை நடத்தி, தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ‘சோபா மாடல் அரசு’ என்ன கொள்முதல் செய்கிறதோ இல்லையோ —

# அடுத்த கட்சி எம்.எல்.ஏ.க்களை - கட்சியினரை கொள்முதல் செய்யும் த.வெ.க. அரசு!

## ஆர்க்காட்டார் இல்ல மணவிழாவில் — சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சாடல்!



**‘சென்னை, ஜூன் 19–**

**கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

“கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற, ஐயா ஆர்க்காட்டார் அவர்களின் இல்லத் திருமண விழாவில், கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஐயா ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பேரனும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி அவர்களின் மகனுமான சகோதரர் வி.கே.சித்தார்த்-அஷ்ரயா காயத்ரி இணையர்கள் இன்று திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கிறார்கள்.

**வரவேற்கும் வாய்ப்பு**

மணமக்களுக்கு உங்களின் அத்தனை பேர் சார்பாக. முதலில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருமண விழா நிகழ்ச்சியில் கழகத்தின் இளைஞர் அணி செயலாளராகவோ, தமிழ்நாட்டின் எதிர்க்கட்சி தலைவராகவோ நான் பங்கேற்கவில்லை. ஐயா ஆற்காட்டார் அவர்களின் குடும்பத்தில் ஒருவனாகத்தான் உங்களையெல்லாம் வரவேற்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், ஐயா ஆற்காட்டார் அவர்களுக்கும் இருக்கக்கூடிய நட்பைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும். ஐயா ஆற்காட்டார் அவர்கள், கலைஞரின் நிழலாக வலம் வந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் அதிக நேரம் பேசக்கூடியவர், பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர். நாங்கள் எல்லாம் சின்ன வயதில் கோபாலபுரம் வீட்டில் இருக்கும் போது, தினமும் அவர்களைப் பார்ப்போம். காலை 8:00 மணிக்கு தலைவருடன் வந்து பேச ஆரம்பித்தார் என்றால், இரவு 10:00 மணி வரைக்கும் தலைவருடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டவர்தான் ஐயா ஆற்காட்டார் அவர்கள்.

**துணையாக இருந்தவர்**

அது மட்டுமல்ல, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் ஒரு வருட காலம் மிசாவில், சிறையில் இருந்தபோது, அவருக்கும் துணையாக இருந்தவர்தான் ஐயா ஆற்காட்டார் அவர்கள். இன்று எந்த கட்சி ஆட்சிக்கு வருகிறதோ, அந்தக் கட்சியின் கரை வேட்டியைக் கட்டிக்கொண்டு சுற்றுகின்ற ஆட்களையெல்லாம், நாம் அதிகமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதிலேயும் இன்று தமிழ்நாட்டில் இந்த `சோபா மாடல் ஆட்சி’ வந்தபிறகு, அதை கொஞ்சம் அதிகமாகவே நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

இந்த அரசு எதை கொள்முதல் செய்கிறதோ இல்லையோ, அடுத்த கட்சி ஆட்களையும், அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் தொடர்ச்சியாக இந்த அரசு கொள்முதல் செய்துகொண்டு வருகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில், இன்று ஒரே கொடி, ஒரே இயக்கம், ஒரே லட்சியம் என்று ஐயா ஆற்காட்டார் அவர்கள் இன்றைக்கும் பயணம் செய்து கொண்டிருக்கிறார். கொண்ட கொள்கையில் தடம் மாறாமல் பயணிக்கக் கூடிய இன்றைய தலைமுறைக்கு ஐயா ஆற்காட்டார் அவர்கள் ஒரு வழி காட்டியாக செயல்பட்டு வருகிறார். அவர் வழியில் நம் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களும், இன்று கழகத்தின் குரலாக பாராளுமன்றத்தில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருக்கிறார்.

**தயங்கியது கிடையாது**

கலாநிதி வீராசாமி அவர்கள் வெளியே பார்ப்பதற்கு மிகவும் சாஃப்டாகத் தெரிவார். ஆனால், நாடாளுமன்றத்திற்குச் சென்றால், அங்கு பேச வேண்டிய கருத்துக்களை சரியான நேரத்தில் சரியாகப் பேசி தன்னுடைய கருத்துகளைப் பதிய வைப்பார். குறிப்பாக, தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த விஷயங்களைப் பேசுவதற்கு அவர் என்றைக்குமே தயங்கியது கிடையாது.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்தபோது நமக்கு வாக்களிக்காத மக்கள் எல்லாம் இந்த ஆட்சிக்கு வாக்களிக்காமல் தவறிவிட்டோமோ என்ற எண்ணத்தோடு இருந்தார்கள். ஆனால், இன்று இந்த ‘சோபா மாடல் அரசு’ அமைந்த பிறகு, ‘இப்படிப்பட்ட ஒரு மோசமான ஆட்சிக்கு நாம் ஓட்டு போட்டுவிட்டோமே’ என்று மக்கள் வருத்தப்பட ஆரம்பித்திருக்கிறார்கள்.

**சோபா மாடல் ஆட்சி**

இந்த சோபா மாடல் ஆட்சியை, மக்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை. தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் நம் கழக ஆட்சி நிச்சயம் அமையும். தமிழ்நாடு மீண்டும் வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் என்று சொல்லி மணமக்களுக்கு உங்கள் அனைவரின் வாழ்த்துகளையும் தெரிவித்து நம் இல்ல திருமணத்தை நடத்தி வைக்க வருகை தந்திருக்கக்கூடிய கழகத் தலைவர் அவர்களை வருக வருக என வரவேற்கிறேன்.

**மூத்த முன்னோடிகள்**

வாழ்த்துரை வழங்க உள்ள கழகத்தின் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களையும், முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என். நேரு அவர்களையும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா அவர்களையும், கனிமொழி கருணாநிதி அவர்களையும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எ.வ.வேலு அவர்களையும், மா. சுப்பிரமணியன் அவர்களையும், அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களையும், மாதவரம் சுதர்சனம் அவர்களையும் வந்திருக்கக்கூடிய அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களையும், அனைத்து முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும், அனைத்து அணிகளின் நிர்வாகிகளையும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், கழகத்தின் அனைத்து மூத்த முன்னோடிகளையும், மணமக்களின் உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும்மேலான அன்பு உடன் பிறப்புகளான உங்கள் அத்தனை பேரையும் இந்த திருமண விழாவுக்கு வருக வருக என வரவேற்று அமர்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மணவிழாவுக்கு வந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கோவில்பட்டி புது ரோடு பகுதியில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் 17.06.2026 அன்று காலை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா. கருணாநிதி, SVSP மாணிக்கராஜா, ஏஞ்சலா, ஆனந்தசேகரன், சுரேஷ், சின்னப்பாண்டியன், சுப்பிரமணியன், கருப்பசாமி, முருகேசன், ராதாகிருஷ்ணன், ஜெயகண்ணன், சுரேஷ் கண்ணன், கிருஷ்ணகுமார், பாலகுமார், ராமர், பீட்டர், SVSP நாகராஜா, ஆர்.எஸ். ரமேஷ், விநாயக ரமேஷ், இந்துமதி, மகேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

### முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடி தேவையில்லை — 132 அடியே போதும் என

# கம்பம் த.வெ.க. எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா சர்ச்சை பேச்சு!

## விவசாயிகள் கடும் கண்டனம்!

தேனி , ஜூன் 19-

த.வெ.க. கட்சியின் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 152 அடி தேவையில்லை 132 அடியே போதும் என்ற சர்ச்சை பேச்சால் விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழக கேரளா எல்லையில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணை 152 அடி உயரம் கொண்டதாகும், இந்த அணையை நம்பி. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

இந்நிலையில் கடந்த 2011 ம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்தக் கோரி தேனி மாவட்டம் மட்டுமின்றி மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் மற்றும் பொது மக்கள் ஒரு மாதமாக பல்வேறு போராட்டங்களை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2014ல் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. அதில் முல்லைப் பெரியாறு பலமாக உள்ளது. அதில் 142 அடி வரை நீர் தேக்கிக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

இந்நிலையில் தேனி மாவட்டம் கம்பம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா நேற்று முன்தினம் கேரளா தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தமிழக உரிமைகள் பறிபோகும் அளவிற்கு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 தேவையில்லை. 132 அடி போதும் என்று இது கம்பம் மற்றும் தேனி மாவட்ட விவசாயிகள் இடையே கடும் கோபத்தையும், கடும் கண்டனத்தையும் தெரிவித்து உள்ளது.

இது குறித்து முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு விவசாய சங்க முதன்மை தலைவர் சலேத் கூறியபோது.

முல்லைப் பெரியாறு அணை பற்றி பேச யாருக்கும் உரிமை கிடையாது, முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடி உயரம் உயர்த்தி கொள்ளலாம் என்று கடந்த 2014 தீர்ப்பு வழங்கியது உள்ளது. மேலும் பேபி அணையை பலப்படுத்தி பின் 152 அடி உயர்த்த வேண்டும் என்று இன்றும் விவசாயிகள் கூறிவரும் நிலையில் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாதன் மிஸ்ரா 152 அடி உயரம் தேவையில்லை 132 அடியே போதும் எங்களுக்கு என்று கேரளா தனியார் தொலைக்காட்சிக்கு ஏற்ப பேசியது. அந்த சர்ச்சை பேச்சு மிகவும் தவறானது கடும் கண்டனத்திற்கு உரியது என்றும் மேலும் விவசாயிகளுடன் ஆலோசித்து இது பற்றி அவர்களிடம் கேட்கப்படும் என கூறினார்.